மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1993) நிறைவேற்றப் பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

10 அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) காமன்வெல்த் பாராளுமன்ற சங்க, தமிழகக் கிளையின் கூட்டம் நடைபெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பகல் 12.30 மணி அளவில் நடைபெற இருந்த காமன்வெல்த் பாராளுமன்ற சங்க, தமிழகக் கிளையின் பொது உறுப்பினர்களுடைய கூட்டம், இன்று பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஏ) கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1993), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1993) ஆய்வுக்கு @ எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, நீங்கள் எதுவும் சொல்கிறீர்களா? பிறகு கருத்துக் கூறுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிடக்கூடாது. திரு. தம்புசாமி.

பிற்பகல் 1-30

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் விற்பனை வரி (திருத்த) மசோதா மீது ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவான விற்பனை வரி என்பது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வந்து கொண்டிருக்கிறது. இந்த விற்பனை ஏதோ விற்கக் கூடிய அல்லது அதிலே கிடைக்கக் கூடிய லாபங்களுக்கு மட்டும் விதிக்கக்கூடிய வரியாக இது அமையவில்லை. எந்த அளவிற்கு விற்பனை வரிகளை நாம் சுமத்துகிறோமோ அந்த அளவிற்கு நுகர்வோர் விலை ஏற்றத்தால் பாதிக்கப்படுவார்கள். அதைப் போல இன்றைய தினம் இருக்கக்கூடிய சூழ்நிலையில் தொடர்ந்து மக்கள் பயன்படுத்தக்கூடிய அத்தியாவசியப் பொருட்களுடைய விலைகள் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இப்படித் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்கிற இந்த நிலையிலேதான் விற்பனை வரியையும் நாம் உயர்த்துகிறோம். அப்படி விற்பனை வரியை உயர்த்துகிற போது விற்பனை வரி முழுவதையும் மக்கள் தலையில் சுமத்துகிற ஒரு அபாயம் இருக்கிறது. எனவேதான் இப்படித் தொடர்ந்து வரிகளை உயர்த்துவதை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் விற்பனை வரி அதிகரித்து இருக்கிறது என்று விற்பனையாளர்கள் தொடர்ந்து பல்வேறு இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் கருத்தில் எடுத்துக் கொண்டு விற்பனை வரி அதிகரிப்பதை கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

@ 27-4-1993-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக கருத்துக்களைச் சொல்லி அமர்ந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆனால் நாங்கள் விற்பனை வரியை ஆண்டு தோறும் ஏற்றவே இல்லை. சென்ற ஆண்டு கூட வரவு-செலவுத் திட்டத்தில் நிறைய அதிகமான வரியைக் குறைத்திருக்கிறோம். இந்த ஆண்டு கூட மிக அதிகமான பொருட்களுக்கு, அதுவும் உணவுப் பொருட்களுக்கு நிறைய ஒரு பட்டியலே போட்டு நிதியமைச்சர் அவர்கள் இங்கே படித்தார்கள். அதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்தார்களோ படிக்கவில்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் இந்த குறிப்பிட்ட சட்ட முன்வடிவிலே கூட விலையைத்தான் குறைத்திருக்கிறோம். அதிலே கூட குறைத்தது எல்லாம் பத்தாது என்று நினைத்து இன்றைக்கும் குறைத்து இருக்கிறோம். இதுவரைக்கும் என்னவென்றால் ஒரு பத்து லட்சம் வருமானத்திற்கு வரி செலுத்தினால், பத்து லட்சத்து ஒரு ரூபாய் வருமானம் வந்து விட்டால் அந்த ஒரு ரூபாயிலிருந்து பத்து லட்சம் வரைக்கும் வரி போகும். ஆனால் இன்றைக்கு அப்படி அல்ல. பத்து லட்சம் அவர்களுக்கு வருமானம் வந்தால் அதற்குப் பிறகு 11 லட்சமாக இருந்தால் அந்த 11 லட்சத்திற்கும் கூடுதல் விற்பனை வரி உண்டு. ஆனால் இப்போது அப்படி இல்லாமல் முதல் பத்து லட்சத்தை தள்ளிவிட்டு, அதற்குப் பிறகுதான், இன்றைக்கு அதற்குப் பிறகு வருகிற விற்பனைக்கு 1 லட்சமோ, 2 லட்சமோ அதற்கு மட்டும் கூடுதல் வரி போடுகிறோம் என்ற வகையில் வரிச் சலுகை அமைத்திருக்கிறோம். இந்தக் குறிப்பிட்ட சட்ட முன்வடிவில் கூட வரிச் சலுகையைத்தான் கொடுக்கிறோம் என்பதை இங்கே உங்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திருப்தி தானே! மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது, சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு—2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 14/1993) நிறைவேற்றப் பெற வேண்டும்'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது, சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது,

பிற்பகல் 1-35

(ஐ) வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1993), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1993) ஆய்வுக்கு@ எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'',
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் வருமானத்திலே ஆண்டு வருமானம் 22,000-க்கு மேல் ரூ. 30,000 வரை உள்ள வருமானத்திற்கு 20 விழுக்காடு வருமான வரி என்று இருந்ததை இப்போது 28,000-க்கு மேல் 30,000 வரை இருக்கின்ற தொகைக்கு 20 விழுக்காடு வருமான வரி என்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தத் திருத்தம் கொண்டு வந்திருப்பதை 22,000 என்றிருப்பதை 28,000 வரை என்று உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். இருந்தாலும் கூட இன்றைக்கு விவசாயத்திலே வருமான வரி கட்டுகின்ற அளவுக்கு வேளாண்மைத் தொழில் இல்லை என்ற உண்மையையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வேளாண்மைத் தொழில் அதனுடைய உற்பத்திப் பொருள்கள் அத்துணையுமே 20 ஆண்டுக் காலத்திலே ஏற்படாத ஒரு சரிவை அடைந்திருக்கின்ற நேரத்தில் இன்றைக்கு விவசாயத்திற்கு முத லீடாகப் போடுகின்ற முட்டுவழிச் செலவுகள் அனைத்தையுமே 3, 4 மடங்கு உயர்த்தியிருக்கின்ற இந்த நேரத்திலே இந்த விவசாய வருமான வரி என்ற ஒன்றை வைத்துக்கொண்டிருப்பதே சரி

@27—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.